ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2020.07.08 |

## நிதி மற்றும் நிதிக் குத்தகைக்குவிடுதல் வியாபாரங்களின் ஒழுங்கீனங்கள் மற்றும் சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளை விசாரணை செய்து அறிக்கை அளிப்பதற்கான குழு

நிதிக் குத்தகைக்குவிடும் வியாபாரங்களில் அண்மையில் ஏற்பட்ட சம்பவங்களைக் கருத்திற்கொண்டு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், நிதி மற்றும் நிதிக் குத்தகைக்குவிடும் வியாபாரங்களின் ஒழுங்கீனங்கள் மற்றும் சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளை ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்கும் அத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான விதந்துரைப்புக்களைச் செய்வதற்குமாக மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றினை நியமித்திருந்தார்.

குழுவினால் செய்யப்பட்ட கோரிக்கைகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் பொதுமக்கள், சிவில் அமைப்புக்கள், நிதியியல் துறைச் சங்கங்கள் மற்றும் நிதி வியாபாரம் மற்றும் நிதிக் குத்தகைக்குவிடும் வியாபாரங்களில் ஈடுபாடுகொண்ட ஏனைய தரப்பினர்களிடமிருந்து 200இற்கும் மேற்பட்ட அபிப்பிராயங்கள், முன்மொழிவுகள் அல்லது முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்தன. குழுவானது அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டவற்றை எல்லாம் ஆராய்ந்து அறிக்கையினை நிறைவுசெய்ததுடன் அறிக்கையானது 2020.07.07 அன்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

குழுவானது, குறிப்பாக, நிதியைக் குத்தகைக்கு விடுகின்ற வியாபாரங்களிலுள்ள சட்டத்திற்கு மாறான மற்றும் ஒழுங்கீனமான நடவடிக்கைகளின் மீது கவனத்தினைச் செலுத்தியதுடன் நிதிக் குத்தகைக்குவிடும் வியாபாரத்தில் கவனத்தினை ஈர்க்கும் இரண்டு விதமான நடவடிக்கைகளைக் கொண்ட வகைகளை அடையாளம் கண்டது. அவையாவன: பதிவுசெய்யப்பட்ட நிதி வியாபாரங்களின் நடவடிக்கைகள் மற்றையது சட்டத்திற்கு மாறான தொழிற்பாட்டாளர்களின் நடவடிக்கைகள்.

மேலும், குழுவானது மேலே குறிப்பிடப்பட்ட வகைகளிலிருந்து தோன்றுகின்ற நடவடிக்கைகள் சாதனங்களின் உடைமையினை மீட்டுக்கொள்வதுடன் தொடர்பான பிரச்சனைகள், நிதிக் குத்தகைக்கு விடுபவர் மற்றும் குத்தகைக்கு பெறுபவர் இடையேயான உடன்படிக்கையிலுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் ஏற்பாடுகளில் காணப்படும் குறிப்பிட்ட இடைவெளிகள் என்பனவற்றைச் சுற்றி முக்கியமாக காணப்படுகின்றதென அடையாளம் கண்டது.

இதன்படி, குழுவானது குறுங்கால மற்றும் நீண்டகால முன்மொழிவுகளை விதந்துரைக்கின்றது. இதில் குறுங்கால முன்மொழிவுகள் அடையாளங் காணப்பட்ட பிரச்சனைகளுக்கு வினைத்திறன்மிக்க

தீர்வுகளை வழங்குவதன் மூலம் தற்போதைய பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதுடன் நீண்டகால முன்மொழிவுகள் முக்கியமாக நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் திருத்தங்கள் மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தின.

| குறுங்கால முன்மொழிவுகள் | நீண்டகால முன்மொழிவுகள் |
|---|---|
| 1. சாதனங்களை வலிந்து உடைமையில் கொள்வதனை தடைசெய்தல்<br><br>2. சட்டத்திற்கு மாறான குத்தகைக்குவிடும் நிறுவனங்களை ஒழித்தல்<br><br>3. நிதிக் குத்தகையை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்படும் படிவங்களை ஒழுங்குமுறைப்படுத்தல்<br><br>4. நிதிக் குத்தகை தொடர்பில் பொதுமக்களினதும் பொலிஸாரினதும் விழிப்புணர்வினை அதிகரித்தல்<br><br>5. நிதிக் குத்தகையில், சாதனமொன்றுக்கு குத்தகைக்குப் பெறுபவரினால் செலுத்தப்பட்ட பெறுமானங்களைத் தீவிரமான முறையில் ஒழுங்குபடுத்தல்<br><br>6. “கணிசமாக முறிவடைதல்” தொடர்பான பணிப்புரைகளை விடுத்தல்<br><br>7. நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் 39ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள “அறிவித்தல்” என்ற சொல்லினை வரைவிலக்கணம் செய்யும் பணிப்புரைகளை விடுத்தல்<br><br>8. வசதிகள் தவணைக் கொள்வனவு வசதிகளா அல்லது நிதிக் குத்தகைக்குவிடும் வசதிகளா என்பதனைக் குறித்துரைக்கின்ற பணிப்புரைகளை விடுத்தல்<br><br>9. தண்ட வீதங்களை ஒழுங்குமுறைப்படுத்தல்<br><br>10. நிதிக் குத்தகைக்குவிடுதல் தொடர்பான மதிப்பீடுகளை ஒழுங்குமுறைப்படுத்தல் | • நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் பின்வரும் அம்சங்களுக்கு திருத்தங்கள் விதந்துரைக்கப்பட்டுள்ளன.<br><br>1. சாதனங்களின் உடைமையினை மீட்டுக்கொள்வது தொடர்பான செயன்முறையினை நீதிமன்றங்கள் ஊடாக விரைவுபடுத்தல்<br><br>2. சாதனங்களை மறைத்து வைப்பது குற்றவியல் சார்ந்த குற்றமொன்றாக மாற்றுதல்<br><br>3. குத்தகைக்குவிடும் சட்டத்தில் உள்ள “குற்றம்” தொடர்பான ஏற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தல்<br><br>4. சட்டத்திற்கு மாறான தொழிற்பாட்டாளர்களினால் “குத்தகைக்குவிடுதல்” என்ற சொல் பயன்படுத்தப்படுவதனைத் தடைசெய்தல்<br><br>5. குத்தகைக்குப் பெறுபவர்களின் உரிமைகளை மாற்றுதல் அல்லது சாட்டுதல்செய்தல்<br><br>• மேலும், நிதியியல் துறையில் நுகர்வோர் பாதுகாப்பினை விரிவுபடுத்துவதற்கான தேவையும் விதந்துரைக்கப்பட்டுள்ளது. |



இலங்கை மத்திய வங்கியின் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. கே. ஜி. பி. சிறிகுமார அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன் அவர்களிடம் அறிக்கையினைக் கையளிக்கின்றார்.